பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 23 திங்கட்கிழமை 08.08.2022 கதிர் 276

**இது ரகசியம் அல்ல!**

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கொடுத்தானாம் ஆண்டி' என்பார்கள். அது போன்ற ஒரு வேலையை நமது புலம்பெயர் சமூகம் செய்யப் போகின்றது என ஓர் அன்பர் எச்சரிக்கின்றார். இதனை என் பத்தி ஊடாக வெளிப்படுத்தும்படியும் ☞2

## சர்வ கட்சி அரசில் பதவி எதையும் மைத்திரி எதிர்பார்க்கவில்லையாம்



சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் நிலையில், அதைச் சிக்கலுக்குள்ளாக்க நினைப்பவர்களும் உள்ளனர் என முன்னாள் ☞2

# தமிழ்க் கூட்டமைப்புக்குள் இரண்டு கறுப்பு ஆடுகளாம்

## புளொட் மாநாட்டில் ரெலோ தலைவர் காட்டம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்தது; இருக்கின்றது. ஆனால் இரண்டு, மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால் மக்களினுடைய மனதில் இருந்து அது (அதன் செல்வாக்கு) குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது. - இப்படி தமிழீழ விடுதலை இயக்கத்தின. (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார். ☞2


## சாலை நிர்மாணக் கடன் வசதி; நிறுத்தியது சீன எக்ஸிம் வங்கி

இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட கடன் வசதியை சீனாவின் எக்ஸிம் வங்கி இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தும் இலங்கையின் முடிவு ஆகியவை இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட 51 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை சீனாவின் எக்ஸிம் வங்கி இடைநிறுத்தியுள்ளது. ☞2

## புளொட்டின் தேசிய மாநாட்டில் பல கட்சிகளினதும் தலைவர்கள்



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்டின்) பத்தாவது தேசிய மாநாடு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலுள்ள ராஜாஹம்சிகாமண்டபத்தின்சதானந்தம் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது மங்கள விளக்கேற்றப்பட்டு புளொட்டின் செயலதிபர் உமா மகேஸ்வரனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது

புளொட்டின் சர்வதேச கிளைகளின் ஆலோசகர் கிருஸ்ணன் மற்றும் ☞4

## ரணில் - சஜித் அணிகள் இரண்டும் இணைந்து செயற்படும் யோசனை!



ஐக்கிய தேசியக்கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படும் வகையில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் இது தொடர்பில் இறுதி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தரப்பில் இருந்தே இது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தரப்பிலும் இது தற்போது வாத விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ☞2

## வடக்குக்கு வெளியே அனுப்பப்பட்ட இரு செயலாளர்களும் இன்று வழக்கு

### ஆளுநருக்கு எதிராக உயர்நீதிமன்றில் ரிட் மனு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 08

வடக்கு மாகாணத்தில் ஆளுநரினால் வெளியே அனுப்பப்பட்ட இரு மூத்த செயலாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள் சட்ட முரணானவை எனத் தெரிவித்து ஆளுநருக்கு எதிராக இன்று உயர் நீதிமன்றில் ரிட் மனுத் தாக்கல் செய்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

வடக்கின் இரு மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன், பா.செந்தில்நந்தனன் ஆகியோர் மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா 2022.07.26 ஆம் திகதி கடிதம் வழங்கியிருந்தார். இந்த விடயத்தில் உரிய முறைமைகளோ, பிரமாணங்களோ ☞4

## கப்பல் விவகாரம் குறித்து சீனத் தூதரகம் இலங்கை அதிகாரிகளுடன் பேச முயற்சி

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் உயர் தொழில்நுட்ப சீன ஆராய்ச்சிக் கப்பலை நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டதை ஒத்தி வைக்குமாறு இலங்கை அரசு சீனத் தூதரகத்தைக் கோரியதை அடுத்து, கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், இலங்கையின் மூத்த அதிகாரிகளுடன் அவசரச் சந்திப்பை நாடியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சீனாவின் விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு ஆய்வுக் கப்பலான 'யுவான் வாங் 5' ஓகஸ்ட் 11 முதல் 17 வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தத் திட்டமிடப்பட்டமை பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்திற்கு ஓகஸ்ட் 5 திகதியிட்டு அனுப்பிய 'மூன்றாம் நபர்' குறிப்பில், இந்த ☞2

## புதன் வரை ஒரு மணி நேர மின்வெட்டு




இன்று முதல் நாளை மறுதினம் புதன்கிழமை வரை தினசரி ஒரு மணி நேரம் மின்வெட்டை மேற்கொள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

# நீங்களாக வெளியேறி வழியை விடுங்கள்; இல்லையேல் அம்பலப்படுத்தப்படுவீர்கள்!

## தவறிழைத்த அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 08

முறைகேடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் நீங்களாகவே வெளியேறுங்கள். இல்லையேல் அதிகாரிகளின் முறைகேடுகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எச்சரித்திருக்கின்றார்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற நிர்வாக அதிகாரிகளின் மாற்றம் தொடர்பில் நேற்றைய தினம் செய்தியாளர்கள் ஆளுநருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் வடக்கு மாகாண நிர்வாகம் ஒரு சில அதிகாரிகளை திருப்திப்படுத்தும் முகமாககவே செயற்பட்ட நிலையில், அத்தவறுகளை விட்ட அதிகாரிகள் தாங்களாகவே உணர்ந்து வெளியேறி, மாகாண நிர்வாகத்தை வினைதிறனாக நடத்துவதற்கு வழி விட வேண்டும்.

வட மாகாணத்தில் கீழ்நிலை அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மறைக்கப்பட்டு ஒரு சில மேல் அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் செயற்பட்டமை பற்றிய விடயங்கள் எனக்கு ஆதாரபூர்வமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன.

13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் கேட்டுக் கொண்டமையால் இந்தப் பதிவு.

நாட்டை விட்டுத் தப்பி ஓடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது சிங்கப்பூரில் பதுங்கி இருக்கின்றார். மூன்று மாத காலம் அவர் அங்கு தங்கியிருக்கத் தடை ஏதும் வராது – சிக்கல் எதுவும் நேராது – என்று நேரத்துடனேயே குறிப்பிட்டிருந்தேன். மூன்றாவது தடவையாக இரண்டு வார கால விஸா நீடிப்பு எந்தச் சமயத்திலும் அவருக்குக் கிட்டும் எனத் தெரிகின்றது. இதேபோன்று இன்னும் மூன்று விஸா நீடிப்புகள் அவருக்குத் தாராளமாகக் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதுவல்ல பிரச்சினை.

அவர் இப்போது நாட்டுக்குத் திரும்பி வந்தால் இங்கு அவருக்கு எதிரான எழுச்சி வெடிக்கும் என்ற ஆபத்திருப்பதாக அவரே கருதுகின்றார். அது இன்றைய நிலையில் உண்மையும் கூட. அதனை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சில தினங்களுக்கு முன்னர் கோடி காட்டி இருக்கின்றார். நாட்டின் நிர்வாகத்தையும் பொருளாதார விடயங்களையும் அவர் போட்டடித்து விட்டார் என்ற சீற்றமே – கோபமே – தென்னிலங்கை மக்களுக்கு. அதைத் தவிர, அவர் மீது தெற்கு மக்கள் கோபிப்பதற்கு வேறு முகாந்திரம் இல்லை. அதற்காகத்தான் அவர் நாட்டுக்குத் திரும்பி வர விடக்கூடாது என்ற எழுச்சி இங்கு.

ஆனால் சமய சந்தர்ப்பம் தெரியாமல் யுத்தக் குற்றங்கள், இனவழிப்பு, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக கோட்டாவை கைது செய்ய வேண்டும் என்ற கோஷத்துடனான போராட்டத்தை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தொடங்கியிருக்கின்றன சில புலம்பெயர் தரப்புகள். ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு அடுத்த மாதம் தொடங்கும் போது இதை ஒட்டிய புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டங்கள், நெருக்குவாரங்கள், போராட்டங்கள் இன்னும் தீவிரமாகும். புலம்பெயர் தேசங்களில் புதிய எழுச்சி உருவாகும்.

அச்சமயத்தில் சிங்கப்பூரிலோ அல்லது பிறிதொரு இடத்திலோ பதுங்கியிருக்கக் கூடிய கோட்டாபய உடனே கைது செய்யப்பட வேண்டும் என்று சர்வதேசத் தரப்புகளை வலியுறுத்தும் எழுச்சி கோலங்களும் பிறக்கும்.

அது வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகுந்திருக்கும் கோட்டாபயவை இந்தப் புலம்பெயர் சமூகம் பிடித்து சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது பிறிதொரு நாட்டிலோ ஒப்படைத்து விடும் என்ற பயத்தை தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

நாட்டைப் புலி பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு அளப்பரிய பணியாற்றிய கோட்டாபய அந்த நடவடிக்கைக்காக வெளிநாடு ஒன்றில் கைதாவதா, அதற்கு அனுமதிக்கக் கூடாது, அவரைத் தாய் நாடான இலங்கைக்குக் கொண்டு வந்து பாதுகாப்பாக வைத்திருங்கள் என்று தென்னிலங்களை மக்களே கூறும் நிலைமை இதனால் ஏற்படும் என்று அந்த அன்பர் எச்சரிக்கின்றார்.

அதையும் கவனத்தில் எடுத்துத்தான் நாம் காய் நகர்த்த வேண்டும். இல்லையேல் இப்போது கோட்டா நாட்டுக்குள் நுழையக் கூடாது என்று சீறும் தென்னிலங்கை மக்கள், தாங்களாகவே கோட்டாவை வரவேற்று, இங்குப் பாதுகாப்பாகத் தஞ்சம் அளிக்கும் நிலைமை ஏற்படும். ஆகவே சிந்தித்து செயல்படுவது – காலமறிந்து காய் நகர்த்துவது – புலம்பெயர் சமூகத்துக்கு பொருத்தமானது.

– மின்னல் –

---

## சாலை நிர்மாணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதனால் சுமார் 2000 பேர் வேலைகள் இழக்கும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான 37 கிலோமீற்றர் நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்தில் பணிபுரிந்த சுமார் 500 சீன பிரஜைகள் ஏற்கனவே வெளியேறத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்து.

கடன் வசதி நிறுத்தப்பட்டதால், திட்டம் தாமதமாகும் என்றும், இதன் காரணமாக திட்டத்திற்கு பொறுப்பான ஒப்பந்ததாரர் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டதும் இடைநிறுத்தப்பட்டுள்ள கடன் வசதியை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

---

## சர்வ கட்சி அரசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அவர்கள் யார் என்பதை கண்டறிய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒரு பகுதியினர் தயாராக இருப்பதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சர்வகட்சி அரசாங்கத்தில் பதவிகளை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பு தமக்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் அவர் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

---

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று யாழ்ப்பாணத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். தனிக் கட்சிகளுடைய எந்தவொரு நாட்டாண்மைத்தனத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்களை நாம் காப்பாற்ற முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாவிட்டால் அது இல்லாமல் போகும்.

வெறும் உதட்டளவிலேயே தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. உளப்பூர்வமான விடுதலையை தொடர்பாக பேசவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட வேண்டும். மக்களை ஏமாற்றக் கூடாது. தமிழ் தேசிய கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். ‘அண்ணன், தம்பி’ என்று நாட்டாண்மைத்தனம் வேண்டாம். எங்கள் மக்கள் தற்போது இக்கட்டான சூழலில் இருக்கின்றார்கள்.

அவன் பிழை, இவன் பிழை என நாம் கூறுகின்றோம். மக்களின் கஷ்டங்களை போக்குகின்ற – இனத்தை விடுதலை செய்கின்ற – விடயங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோமா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே அனுபவம் மிக்க தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்களது ஆலோசனைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை உண்டு பண்ண வேண்டும். தற்போது வந்தவர்கள் தமிழரசு கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்கின்ற செயலைச் செய்கின்றனர். இதனை ஒரு காலமும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 இல் இருந்து தற்போது 10 ஆக மாறி உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பற்றி உங்களுக்கு தெரியும். விடுதலைப் புலிகளை உடைத்தவர். அவருடைய ராஜதந்திரத்தைப் பற்றிச் சொல்கின்ற போது நரித் தந்திரம் என்பார்கள். அந்த தந்திரமே விடுதலைப் புலிகளையும் பிரித்தாண்டது. அந்தத் தந்திரத்தையே நாங்கள் அண்மையில் பேசுகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாண்டார். கூட்டமைப்பில் சிலர் தனக்கு வாக்களித்தார்கள் எனக் கூறினார். சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் அதனை எதிர்த்துக் கதைத்தார்கள். வெளியில் வந்த போது ரணில் இவ்வாறு கூறியதாக ஒரு செய்தி வெளியானது

ரணிலின் கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற வகையிலும் ஒரு சிலரின் கருத்துக்கள் வெளிப்பட்டன.

அதனால் யாருக்கு வெற்றி என்று சொன்னால் அது ரணிலுக்கே வெற்றி. நாகரிகம் கருதி நான் யாருடைய பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை. இது மாநாடு என்பதால் நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இது யாருக்கு நட்டம்? ஜனாதிபதி சரியாகக் காயை நகர்த்தி இருக்கின்றார். அதனை நாங்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டு எங்களுடைய மக்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு பலமாக இருந்தது; இருக்கின்றது. இரண்டு, மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால் மக்களினுடைய மனதில் இருந்து அது குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது. பலமாக 22 ஆசனங்களைக் கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் மீண்டும் வந்து இணைய வேண்டும். விடுதலைப் புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே இணைந்து செயல்படுகின்ற சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும். – என்றார்.

---

## நீங்களாக வெளியேறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சபைகள் இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவான கட்டமைப்பு.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் வடக்கு மாகாணத்தின் நிர்வாக விடயங்கள் சரிவர இடம்பெறுகின்றனவா எனக் கண்காணித்தல் மற்றும் அரச சேவையின் ஊடாக பொது மக்களின் தேவைப்பாடுகலை நிறைவேற்றுதல், அபிவிருத்திகளை உறுதி செய்தல் போன்றவை எனது பொறுப்பு.

வடக்கு மாகாண நிர்வாகத்தில் இடம் பெற்ற நிர்வாக முறைகேடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ப்பில் திருப்தி அடைய முடியவில்லை.

இலங்கையில் உள்ள ஏனைய எட்டு மாகாணங்களில் உள்ள விவசாய பணிப்பாளர்கள் எவ்வளவு காலம் பணியில் இருந்தார்கள், எவ்வளவு காலம் இருக்க முடியும் என ஆராய்ந்தால் வடக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் சற்று வித்தியாசமாக இருக்கின்றன.

இலங்கையில் உள்ள விவசாய நிர்வாக தரம் 1இல் உள்ள அதிகாரிகளை மாகாண விவசாயப் பணிப்பாளராக மத்திய விவசாய அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் நிர்வாக ஒழுங்குபடுத்தலின் கீழ் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் அனுப்பப்படுகிறார்கள்.

அகில இலங்கை சேவை தரம் 11 மற்றும் தரம் 111 ஆகிய பதவி வகிக்கும் அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அதே துறையைச் சேர்ந்த மேலதிகாரிகளால் விசாரணை நடாத்தப்பட்டது. அதன் பெறுபேறு என்ன? அது எங்கே?

வடக்கு நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு எவ்வளவு காலத்துக்குள் மனித உரிமை ஆணைக்குழு தீர்வை வழங்கியுள்ளது?

வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட மாகாண நிர்வாக அதிகாரிகள் தொடர்பிலான விசாரணைகள் எவ்வளவு காலத்துக்குள் முடிவுறுத்தப்பட்டன? சில முறைப்பாடுகள் மறைக்கப்பட்டதன் பின்னணி என்ன?

சில முறைப்பாடுகள் விசாரிக்கும் போது குற்றஞ் சாட்டப்பட்டவரின் பெயர் கூட குறிப்பிடாமல் விசாரணைகள் இடம் பெற்றமை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஒரு சிலரின் தேவைக்கேற்ற சினேக பூர்வமாகச் செயற்படும் அதிகாரிகளினால் கீழ் நிலை அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆளுநர் இடமாற்றங்களை வழங்குவதில்லை. பொதுமக்களால் அல்லது அதிகாரிகளினால் சக அதிகாரிகள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை இடம்பெற்று உறுதிப்படுத்தப்படுமானால் பணிநீக்கம் அல்லது தண்டனை வழங்குதலை ஆளுநர் என்ற வகையில் மேற்கொள்வேன்.

வடக்கு மாகாணத்தில் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கோப்புகள் என்னிடம் இருக்கின்ற நிலையில் மக்களை யாரும் திசை திருப்ப முடியாது.

ஆளுநர் என்ற வகையில் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு காலமும் தவறுகள் செய்தவர்கள் தாங்களாகவே இடமாற்றத்தைப் பெற்றுச் சென்று மாகாண நிர்வாகத்தை உரிய முறையில் மேற்கொள்ள வழிவிட வேண்டும்.

எனது பொறுமையை சோதிக்க விரும்பினால், விசாரணைக் குழு அமைத்து எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதோடு முறைகேடுகள் தொடர்பில் பொது வெளியில் அம்பலப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் தள்ளப்படுவேன். – என அவர் தெரிவித்துள்ளார்.

---

## கப்பல் விவகாரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விவகாரம் குறித்து மேலும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் வரை யுவான் வாங் 5 கப்பலின் அம்பாந்தோட்டைக்கு வருவதை ஒத்திவைக்குமாறு அமைச்சகம் கோர விரும்புகிறது. – என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், கப்பலின் வருகையை தாமதப்படுத்தக் கோரிய வெளிவிவகார அமைச்சின் குறிப்பு கிடைத்ததை அடுத்து, இலங்கை உயர் அதிகாரிகளுடன் அவசரச் சந்திப்பு ஒன்றைக் கோரியது என்று கொழும்பில் உள்ள வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## ரணில் - சஜித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஏற்கப்போவதில்லை என்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறி வருகின்றபோதும், கட்சியின் பலர் அமைச்சு பதவிகளை ஏற்கவேண்டும் என்ற கொள்கையில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இலங்கையின் உதாசீனம்

**வெளியுறவுக் கொள்கைகள், கோட்பாடுகளைக் கையாள்வதில் கடைகெட்ட நாடாகக் கருதப்படுபவற்றில் இலங்கையும் ஒன்று.**

**நாடுகளுடன் சர்வதேச ஒப்பந்தங்களை வசதிக்கேற்ப செய்வதும், பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றுவதும், இலங்கை இராஜதந்திரத்தின் பரவணிச் சீத்துவம். மாற்ற முடியாத பண்பியல்பு.**

**இலங்கை – இந்திய ஒப்பந்ததத்தில் இணங்கப்பட்ட ஏற்பாடுகளை சட்ட ரீதியாக மாற்றுவதில் பின்னடிப்பு. சட்டமாக்கியவற்றையும் மூன்றரை தசாப்தங்கள் கடந்தும் நடைமுறையாக்கம் செய்யாத தடிப்பு. இப்படி சர்வதேச ஒப்பந்தங்களையும் அவற்றின் ஏற்பாடுகளையும் சட்டையே செய்யாத இலங்கையின் போக்கு மாற்றமுடியாத அதன் பேரினவாதத் திமிர்த்தனத்தின் – மகாவம்ச மனவமைப்பின் – நடைமுறைதான்.**

**இப்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் சீனப் பாதுகாப்பு உளவுக் கப்பலின் வருகையால் எழுந்துள்ள சர்ச்சையும் கூட அத்தகைய மெத்தனத்தின் விளைவுதான்.**

**இலங்கைக்கு மிக அருகில் உள்ள தேசமான இந்திய உபகண்டத்துடன் அதன் பாதுகாப்பை ஒட்டி பல இணக்கப்பாடுகளை காலத்திற்குக் காலம் இலங்கை செய்து கொண்டுள்ளது. அவை அடிக்கடி கொழும்பு அதிகார பீடத்துக்கு மறந்து போய் விடுகின்றது போலும்.**

**அப்படி இந்திய சிரத்தையை மறந்துதான் – அல்லது வேண்டுமென்றே புறமொதுக்கித்தான் – அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு 99 ஆண்டுகளுக்குத் தாரை வார்க்கும் ஏற்பாட்டை இலங்கை செய்தது.**

**கடல் போக்குவரத்து, பாதுகாப்பு, கடற்கலங்களின் நடமாட்டம், வருகை போன்றவை தொடர்பில் இலங்கை, இந்தியா, மாலைதீவு ஆகிய முத்தரப்புகளிடையேயும் ஓர் ஒழுங்கு ஏற்பாடு உண்டு. இது தொடர்பான உயர்மட்டக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் தொடர்ந்து அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. கடந்த வருடங்களில் கூட இந்த உயர்மட்டச் சந்திப்புகள் நடந்தன. இந்தியத் தரப்பில் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (இந்திய மத்திய அமைச்சர் ஒருவருக்கு சமதையான பதவி இது) இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வது வழமை. அது போல இலங்கைத் தரப்பில் பாதுகாப்புச் செயலாளர் இக்கூட்டங்களில் பங்கு பற்றி உயர்மட்டத் தீர்மானங்களை எடுப்பார்.**

**2015 இற்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவே பாதுகாபபு அமைச்சின் செயலாளராக இருக்கையில் இத்தகைய கூட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றார்.**

**அந்தக் கட்டமைப்பின் ஒழுங்கு முறையின்படி இத்தகைய பாதுகாப்புத் தொடர்பான அந்நிய சக்திகளின் கடற்கலங்கள், கடல் நடவடிக்கைகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இடம்பெறுமாயின் அது குறித்து, ஒரு நாடு கிடைத்த தகவலை மற்றைய இரு நாடுகளுக்கும் இயன்ற விரைவில் – முற்கூட்டியே வழங்கி – பரஸ்பரம் முத்தரப்புகளும் சேர்ந்து அந்த விடயத்தைக் கையாளும் ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது முறைமை.**

**சீனாவின் பாதுகாப்பு உளவுக் கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வர இருப்பது, அதற்கான அனுமதி அளித்தல் போன்ற விடயங்களில் இந்த மூன்று நாடுகளின் கூட்டு ஏற்பாட்டை இலங்கை உதாசீனம் செய்து நடந்தது. அதன் விளைவே இப்போதைய இக்கட்டு – நெருக்கடி – என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இலங்கையின் பொறுப்பற்ற போக்கு இது.**

# ஊடகவியலாளர்கள் கொலை வழக்கில் ராஜபக்ஷக்கள் அரசுக்கு எதிராக தீர்ப்பு

## நெதர்லாந்தின் ஹேக் மக்கள் நீதிமன்றம் வழங்கியது

இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் இலங்கையின் முன்னைய அரசாங்கம் குற்றம் இழைத்துள்ளதாக நெதர்லாந்தின் ஹேக் மக்கள் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பிரதான சாட்சியாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பரிசோதகர் நிஷாந்த சில்வா சாட்சியம் வழங்கியுள்ளார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படைக்கு மிக்ரக விமானங்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனவும், கையடக்க தொலைபேசி கோபுரங்களில் பதிவாகியிருந்த இலக்கங்களில் இருந்து இந்தத் தகவல்கள் தெரியவந்தன எனவும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

இந்தக் கொலைகளுக்கு இராணுவத்தின் திரிபோலி பகுதியே காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இலங்கை அரசின் சார்பில் எந்த ஒரு சட்டத்தரணியும் மக்கள் நீதிமன்றத்தில் முன்னிலை ஆகவில்லை என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சந்தித்தார் இராணுவத் தளபதி விகும்!

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேவை இராணுவ தலைமையகத்தில் சந்தித்துள்ளார்.

இதன்போது வடமாகாண அக்கறை மற்றும் இராணுவத்தின் பங்களிப்பு தொடர்பான கருத்துகளை பரிமாறிக்கொண்டுள்ளர்.

இந்த சுருக்கமான சந்திப்பின் போது, தீபகற்பத்தில் சிவில் – இராணுவ ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து சிவில் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சுமுகமான சந்திப்பின் முடிவில் லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே, வடமாகாண ஆளுநருக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி இலங்கை இராணுவத்தின் நல்லெண்ணத்தை அடையாளப்படுத்தியுள்ளார்.



இராணுவத்தொண்டர் படையின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத்யாப்பா மற்றும் துணைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# நாட்டில் கொவிட் தொற்று உறுதியாகும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் தற்போது கொவிட் தொற்று சடுதியாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் கொழும்பு றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் 12 குழந்தைகளுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கொவிட் தொற்று உறுதியாகும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கொழும்பில் ‘டியூ – 5’ என்ற கொவிட் உப திரிவு, வேகமாகப் பரவுவதாகவும் குறித்த உப திரிவு தொடர்பான மாதிரிகள் தொடர்ச்சியாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், டெங்கு நுளம்புகளிடமிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

## புளொட்டின் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநாட்டிற்காக தமிழகத்தில் இருந்து வருகைதந்த தி.முக. அகில இந்திய தொழிற்சங்க தலைவர் கரூர் கண்ணதாசன் ஆகியோர் புளொட் தலைவர் சித்தார்த்தனால் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

கட்சியின் செயலாளர் நா.இரட்ணலிங்கம் பொதுச்சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தேசிய மாநாட்டில் கட்சியின் பிரகடனமாக அறிவித்தார்.

இந்த மாநாட்டில் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா,தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் செயலாளர் சிறீதரன், மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

மேலும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், க.சிவநேசன், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் புளொட்டின் உள்நாட்டு வெளிநாட்டு முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியினுடைய அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் மாநாட்டிற்கு வருகை தராத போதும் அவருடைய வாழ்த்துரை மாநாட்டின்போது வாசிக்கப்பட்டது.

---

## வடக்குக்கு வெளியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்லது சட்ட ஏற்பாடுகளோ ஆளுநரால் பின்பற்றப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்து மீண்டும் 3 தினங்கள் வடக்கில் பணியாற்ற அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கிடையில் அவர்களை உடனடியாகக் கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கூறும் கடிதம்

பொதுச் சேவை ஆணைக்குழு மூலம் இரண்டாவது தடவையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அவர்களை மாகாணத்தில் இருந்து விடுவிக்கும் கடிதங்களை வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இப்போது வழங்கியுள்ளார்.

இந்த இரு அதிகாரிகளின் சார்பிலும் வடக்கின் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி முன்னிலையாகின்றார் எனத் தெரிகின்றது.

# இந்தியாவில் உள்நாட்டிலேயே தயாரான யுத்த விமானங்கள், ஹெலிகள் களத்திற்கு

## விமானப்படைத் தலைமைத் தளபதி இயக்கி வைத்தார்

இந்தியாவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் விமானத்தை இந்திய விமானப்படைத் தலைமைத் தளபதி இயக்கி வைத்தார்.

இந்திய விமானப்படைத் தலைமைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர். சவுத்ரி, கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் இரண்டு நாள் பயணம் மேற்கொண்டார். அங்குள்ள விமானப்படைத் தளதில் இலகு ரகப் போர் விமானம் தேஜாஸ், இலகு ரக யுத்த ஹெலிக்கொப்டர், இந்துஸ்தான் டர்போ டிரெய்னர் - 40 ஆகிய மூன்று உள்நாட்டு விமான மற்றும் ஹெலிக்கொப்டர்களை அவர் இயக்கி வைத்தார்

தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள இவை, விரைவில் இந்திய விமானப்படையில் இணைகின்றன.

புதுப்பிக்கப்பட்ட தேஜாஸ் விமானத்தை, விமானப் படை தலைமைத் தளபதி ஆய்வு செய்தார். விமான படை தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து வடிவமைப்பாளர்கள் மற்றும் சோதனைக் குழுவினருடன் அவர் உரையாடினார்.

இந்திய விமானப்படையை போர்ப்படையாக மாற்றுவதற்கு திறன் மற்றும் படை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து விமானப்படை தலைமைத் தளபதி விவாதித்தார்.

நிகழ்ச்சியில் இந்திய விமானப்படை, இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனம் மற்றும் விண்வெளித் துறையைச் சேர்ந்தவர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகள் கலந்து



கொண்டனர்.

## தனி ஒருவர் பயணிக்கக் கூடிய டிரோன் இந்தியாவில் அறிமுகம்



இந்தியாவில் முதல்முறையாக ஒரு நபர் மட்டுமே பயணிக்கக் கூடிய பயணிகள் டிரோன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது வரை டிரோன்கள், திருமணங்களில் படம் எடுப்பது, விழாக்கள் மற்றும் பொதுக்கூட்டங்கள் உள்ளிட்டவைகளுக்குக் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்துவது போன்றவற்றுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இனி வரும் காலங்களில் டிரோன்களின் பயன்பாடுகள் மிகவும் முக்கியமான ஒன்றாகும். சொல்லப்போனால், மருந்துகள் முதல் மளிகை சாமான்கள் வரை அம்புலன்ஸ் முதல் டாக்ஸி வரை டிரோன்களின் தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த வகையில், தற்போது இந்தியாவில் முதல்முறையாக ஒரு நபர் மட்டுமே பயணிக்கக்கூடிய பயணிகள் டிரோன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

சமீபத்தில் குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் டிரோன் மூலம் பார்சல்களை டெலிவரி செய்யும் முயற்சியை இந்தியத் தபால் துறை மேற்கொண்டது. அதுமட்டுமல்லாமல், சாலை வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு டிரோன் மூலம் மருந்துகளை அனுப்புவது, ஏர் அம்புலன்ஸ் சேவைகள் உள்ளிட்டவை இந்தியாவின் பல பகுதிகளில் பரிசோதனை செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து தற்போது ஒரு நபர் மட்டுமே பயணிக்கக்கூடிய பயணிகள் டிரோன் முதல்முறையாக இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புனேவில் உள்ள சாகர் டிபென்ஸ் இன்ஜினீயரிங் என்ற நிறுவனம்ஜதைத் தயாரித்துள்ளது. இந்த டிரோனுக்கு ‘வருணா’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. கடந்த மாதம் இதற்கான சோதனை ஓட்டம் பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது பேசிய பிரதமர், மோடி, இனி வருங்காலங்களில், இந்தியாவில் உள்ள அனைவரின் கையிலும் ஸ்மார்ட்போன் இருக்க வேண்டும், ஒவ்வொரு பண்ணையிலும் ஆளில்லா விமானம் இருக்க வேண்டும், ஒவ்வொரு வீடும் செழிப்பாக இருக்க வேண்டும் என்பதே எனது கனவு என்று கூறினார்.

இதன் சிறப்பம்சங்கள் என்னவென்றால், இந்த டிரோனை ரிமோட் மூலம் இயக்கலாம். சுமார் 130கிலோ வரை எடையைத் தாங்கும் இந்த டிரோன் 25 கிலோமீட்டர் வரை செல்லும் திறன் கொண்டவை. அதுமட்டுமல்லாமல், பயணிகளின் பாதுகாப்பிற்காக நிறைய தொழில்நுட்பங்களும் இதில் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறப்படுகிறது. அதாவது, பறக்கும்போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டாலும் பாதுகாப்பாகத் தரையிறங்கும் விதமாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், அவசரகாலங்களில், பாராசூட் தானாகத் திறந்து பாதுகாப்பாகத் தரையிறங்க உதவுமாம்.



## இந்தியாவின் டிஜிற்றல் பரிவர்த்தனை; பாராட்டுகின்றார் சிங்கப்பூர் அமைச்சர்

சிங்கப்பூர் வெளியுறவுத் துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், கம்போடியாவில் ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டுக்கு மத்தியில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தியா கொண்டிருக்கும் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு அவர் பாராட்டினார். இந்தியாவின் டிஜிற்றல் அடையாளம் மற்றும் டிஜிற்றல் பணபரிவர்த்தனை முறைகளுக்காக அவர் இந்தியாவை மெச்சினார்.

மேலும், தங்கள் நாட்டிற்கு இந்தியா ஒரு தெளிவான வாய்ப்பு என்று கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவிற்கு டிஜிற்றல் நிதி, டிஜிற்றல் உள்ளடக்கம் என்பன போன்ற சில பலங்கள் உள்ளன. டிஜிற்றல் அடையாளம் மற்றும் டிஜிற்றல் கட்டண பணபரிவர்த்தனை முறைகள் மூலம் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது எங்களுக்கு ஒரு தெளிவான வாய்ப்பாக அமைந்திருக்கிறது. சிங்கப்பூரில், நிச்சயமாக, எங்களிடம் அந்த அமைப்புகளும் உள்ளன. ஆனால் தென்கிழக்கு ஆசியாவின் மற்ற பகுதிகளுக்கு, எங்கள் கட்டண முறைகளை எவ்வாறு இணைக்கலாம் என்பதை ஆராய்வதற்காக இந்தியா ஒரு தெளிவான வாய்ப்பாக அமைந்திருக்கிறது. மேலும், ஆசியான் - இந்தியா வர்த்தகத்தை நாங்கள் மதிப்பாய்வு செய்து வருகிறோம். இதன்மூலம், இந்திய துணைக் கண்டத்திற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையே சரக்குகளின் இயக்கத்திற்கான கட்டுப்பாடுகளை குறைப்பது, சுங்க அனுமதியை எளிதாக்குதல் மற்றும் வர்த்தகத்தை எளிதாக்குதல் ஆகியன சாத்தியமாகும். - இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியாவின் ஒட்டுமொத்த வர்த்தகத்தில் 3.2 சதவீத பங்கைக் கொண்ட சிங்கப்பூர், 2020 - 21 காலகட்ட அறிக்கையின்படி, இந்தியாவின் 6 ஆவது பெரிய வர்த்தக தோழமை நாடாக உள்ளது. கொரோனா பெருந்தொற்றின் போது, இக்கட்டான சூழலில் சிங்கப்பூரிலிருந்து இந்திய இராணுவக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலம், வெண்டிலேட்டர்கள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் என பல மருத்துவ சாதனங்கள் கொண்டுவரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## தலாய் லாமாவுக்கு லடாக் உயர் விருது

புத்த மதத்தலைவர் தலாய் லாமாவுக்கு லடாக் அரசின் உயர் விருது வழங்கப்பட்டுள்ளது. நல்லிணக்கத்தை வலுப்படுத்த அவர் மேற்கொண்ட பணிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தலாய்லாமா கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் லடாக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

சிறந்த பிரபலங்களுக்கு லடாக்கின் தன்னாட்சி மலைப்பிராந்திய மேம்பாட்டு கவுன்ஸில் சார்பில் உயரிய விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த அமைப்பின் 6 ஆவது விருது திபெத் புத்த மதத்தலைவர் தலாய்லாமாவுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. மனிதாபிமான செயல்கள் குறிப்பாக லடாக் யூனியன் பிரதேசத்தில் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்த அவர் மேற்கொண்டு வரும் சிறப்பான பணிகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டு உள்ளது.



லடாக் மற்றும் திபெத் ஆகிய பிரதேசங்கள் மத மற்றும் கலாசார ஒற்றுமைகளுடன் வலிமை மிக்க சிந்து நதியால் இணைக்கப்பட்டுள்ளன என இந்த அமைப்பின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

# சுமந்திரனும் சாணக்கியனும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக முன்னெடுத்த கையெழுத்து போராட்டத்துக்கு என்ன நடந்தது?

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிசாந்தன் கேள்வி




(கலையமுதன்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கப்போகின்றோம் என்று சொல்லி கிழக்கில் சாணக்கியனும் வடக்கில் சுமந்திரனும் பெரிய போராட்டங்களை செய்து படம் காட்டினார்கள். அதற்கு என்ன நடந்ததென தெரியவில்லை என தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிசாந்தன் கேள்வியெழுப்பினார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் நிசாந்தன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் பிரச்சினைக்காக போராட்டங்களை நாங்கள் முன்னெடுக்கும் போது பெருமளவான மக்கள், இளைஞர்கள் வராமல் இருப்பதற்கு காரணம் பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமல் போனால் எமது சிறுவர்கள் கூட களத்தில் நிற்பார்கள்.

2009 இல் எமது போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் 13 வருடங்களாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள். குறைந்தபட்சம் சிறிய விடயங்களைக் கூட செய்யவில்லை.

நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருந்தார். அந்த காலத்தில் கூட பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க முடியாதவர்கள், அந்த அரசாங்கத்தை இரண்டு மூன்று தடவை முட்டு கொடுத்து தாங்கி இருந் தார்கள்.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றத்துக்கு முன்னாலோ காலி முகத்திடலிலோ உண்ணாவிரதம் இருக்கத் தயாரா? இலங்கையில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு முன்பாக சென்று உண்ணாவிரதம் இருப்பார்களாக இருந்தால் சர்வதேசம் திரண்டு வந்து கரிசனை கொள்ளும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப் போகின்றோம் என்று சொல்லி கிழக்கில் சாணக்கியனும் வடக்கில் சுமந்திரனும் பெரிய போராட்டங்களை செய்து படம் காட்டினார்கள். வடக்கு, கிழக்கு மலையகம் என அவர்கள் பல இடங்களுக்கும் சென்று கையெழுத்தை சேகரித்தார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க யாரிடம் கோரிக்கை விடப் போகின்றோம் என்பது தொடர்பில் விளக்கமாக செய்யாமல் செயற்பட்டனர். அதற்கு என்ன நடந்ததென தெரியவில்லை.

சர்வதேசத்துக்கு பேக்காட்ட முற்படுகின்றார்கள்.

சுமந்திரனும் சாணக்கியனும் மக்களை முட்டாளாக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். படித்த சமூகத்துக்கும் புலம்பெயர் மக்களுக்கும் இது தெரியாமல் அல்ல.

புலம்பெயர்தேசத்துக்கு கடந்த காலங்களில் சென்ற அவருக்கு நடந்த அவமானங்களுக்கு பின்னர் இப்போது ராஜதந்திரத்தை பின்பற்றி தான் போகாமல் அவருடைய பிரதிநிதியாக சாணக்கியனை அனுப்புகின்றார். சாணக்கியன் தமிழ்த் தேசியத்தின் அடியில் இருந்து வந்தவர் அல்ல என்றும் தெரிவித்தார்.

இதன்போது ‘இனப் படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்து’ எனும் கோரிக்கையை முன்வைத்து சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் கையளிப்பதற்காக ஆரம்பித்துள்ள கையெழுத்து போராட்டம் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

# மூலப் பொருள்களின் விலை குறைக்கப்படுமாக இருந்தால் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை குறைக்கலாம்

## யாழ்.மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் மூலப்பொருள்களின் விலை குறைக்கப்படுமாக இருந்தால் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலையைக் குறைக்கமுடியும் என யாழ் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.

வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெதுப்பாக உற்பத்திப் பொருள்களின் விலையை நாங்களாக அதிகரிக்கவில்லை. மூலப்பொருள்களின் விலை உயர்வின் காரணமாகவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவுமே வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிக்க நேரிட்டது.

தற்போது கூட மூலப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு எரிபொருள் சீராகக் கிடைக்கப்பெறுமாக இருந்தால் எமது பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்குத் தடையாக இருக்க மாட்டோம்.

மேலும் தற்பொழுது வெதுப்பகங்களுக்கு எரிபொருளைப் பெறுவதற்கு யாழ்ப்பாண பிரதேச செயலரால் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நல்லூர் பிரதேச செயலகத்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதாவது ஒரு வெதுப்பகத்திற்கு ஓர் எரிபொருள் நிரப்பு நிலையம் என்ற திட்டத்தின் அடிப்படையில் ஒரு திட்டம் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சா.சுதர்சனால் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலும் அது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

எனவே. அந்தத் திட்டத்தை ஏனைய மாவட்டங்களிலும் அல்லது நாடு முழுவதிலும் அந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துமிடத்து வெதுப்பகங்களுக்குரிய எரிபொருளை இலகுவாக வெதுப்பக உரிமையாளர்கள் பெறக்கூடிய நிலை ஏற்படும். அவ்வாறான நிலை ஏற்படும் போது மக்களுக்கான சேவையைத் தடையின்றி முன்னெடுக்க முடியும். – என்றார்.

# மட்டக்களப்பில் அரச அலுவலர்களுக்கு நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல்







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தடுப்பு நான்காம் கட்டம் பூஸ்டராக பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை, மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்குமான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் வெள்ளியன்று முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் மீண்டும் கொரோனா பரவல் ஆரம்பித்துள்ள நிலையில் நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும் என்ற அரசின் அறிவுறுத்தலுக்கமைய முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களுக்கு இந்த நான்காம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனது ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணனின் மேற்பார்வையின் கீழ் மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி இ.உதயகுமாரின் வழிநடத்தலில் மண்முனை வடக்கு சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் வி.விஜயகுமார், கல்லடி பொது சுகாதார பரிசோதகர் எஸ்.அமீர்தாப் மற்றும் புளியந்தீவுக்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர் எஸ்.தீபக்குமார் உள்ளிட்ட மேலும் பல சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களினால் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதுடன், குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களும், நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் இந்தத் தடுப்பூசியைச் செலுத்துவதனால் உயிர் ஆபத்தைத் தவித்துக் கொள்ள முடியும். நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் கொவிட் – 19 பரவல் மீண்டும் ஆரம்பித்துள்ளதுடன் மரணங்களும் பதிவாகி வருகின்றன. தடுப்பூசியை பெற்றுக்கொள்வதன் தேவையை உணர்ந்து அதனைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உயிர் ஆபத்திலிருந்து தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார துறையினர் கேட்டுள்ளனர்.

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெறுவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையை நிரூபிக்க வேண்டுமாம்

## மைத்திரி ஆலோசனை



சர்வதேச நிறுவனங்கள் , அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும். அதற்கு வெகு விரைவில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

எனினும் நாடாளுமன்றத்தில் சிலர் இதனை விரும்பவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற பெண் அமைப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பில் ஏனைய அனைத்து கட்சிகளுடனான கலந்துரையாடல்கள் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அவதானம் செலுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் நாடாளுமன்றத்தில் சிலர் சர்வகட்சி அரசாங்கத்தை விரும்பவில்லை. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே காணப்படுகிறது.

எனினும்இதில்பலஇடையூறுகள்காணப்படுகின்றன. தற்போதுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு , சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜைக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் மத்தியில் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிப்பதற்குள்ள சிறந்த வழி சர்வகட்சி அரசாங்கமேயாகும்.

எனினும் இதனையும் சிலர் எதிர்பார்ப்பார்களாயின் எவ்வாறான நிலைமை தோற்றம் பெறும் என்று சிந்திக்க வேண்டும். அரசாங்கம் முயற்சிக்குமாயின் ஒரு மாத காலத்துக்குள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும்.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுமா இல்லையா என்பதிலேயே அமைச்சுப்பதவிகளை ஏற்பதா இல்லையா என்ற விடயம் அடங்கியுள்ளது. – என்றார்.

# அதாவுல்லா, விக்கி, பிள்ளையானுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படலாமாம்!

## ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிப்பு

சர்வகட்சி அரசாங்கத்தில் ஜீவன் தொண்டமான், ஏ.எல்.எம். அதாவுல்லா, சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களுக்கு அதிகூடிய சேவையை வழங்குவதற்காக அந்த மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலகட்ட பேச்சு நடத்தி வருகிறார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் 30 அமைச்சர்களும், 30 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படும் அதே வேளை, தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் பதவிகள் மாறும் எனவும் அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும்போது தமது உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு யோசனையொன்றை முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுடன் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடந்த நாள்களில் மேற்கொண்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம். சந்திரசேன, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் நிமல் லன்சா ஆகியோருக்கு அமைச்சர் பதவிகளை வழங்க பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சர்வகட்சி அரசு ஒன்றினால் எவ்வித நன்மையும் இல்லை!

## சரத் பொன்சேகா இப்படிக் கருத்து



சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு அரசாங்கம் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் என தான் எண்ணவில்லை என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே தற்போது மக்களின் குறைகளுக்கு உடனடியாகத் தீர்வைக் கண்டறிவதே மிகவும் அவசியம் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# புத்தளம் கருவலகஸ்வெள பகுதியில் கிணற்றுக்குள் விழுந்த யானை



புத்தளம் – கருவலகஸ்வெள பகுதியில் கிணற் றுக்குள் விழுந்த யானை பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் உயிருடன் மீட்கப்பட்டு சரணாலயத்திற்குள் விடப்பட்டுள்ளது.

கருவலகஸ்வெள பொலிஸ் பிரிவிற்குற்பட்ட மஹகோன்வெள பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானையொன்று பாதுகாப்பற்ற முறையில் வெட்டப்பட்ட கிணற்றினுள் விழுந்ததை அவதானித்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் கருவகஸ்வெள வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்குச் சென்று கிணற்றுக்குள் விழுந்த யானையை பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பெக்கோ இயந்திர உதவியுடன் கிணற்றுக்குள் விழுந்த யானையை கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் உயிருடன் மீட்டு பின்னர் தப்போவ சரணாலயத்திற்குள் விட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

# நாட்டைவிட்டு ஒவ்வொரு மணி நேரமும் 32 பேர் வெளியேறுகின்றனராம்

நாடு எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 32 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வெளிவிவகார பிரிவின் தரவுகளுக்கமைய இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

இது கடல் வழியாக சட்டவிரோதமாக தென்னிந்தியா அல்லது ஆஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்லும் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

வெள்ளிக்கிழமை, ஆஸ்திரேலிய எல்லைப் படை சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைய முயன்ற 46 இலங்கையர்களை திருப்பி அனுப்பியது. இந்த ஆண்டு மே மாதத்திலிருந்து அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை 183 ஆகும்.

உடல் ரீதியான துஷ்பிரயோகம், கொள்ளை, நீண்ட வேலை நேரம், மனித உரிமை மீறல்கள், ஊதியம் இல்லாமை அல்லது குறைவான ஊதியம், இறப்பு மற்றும் ஊனம் போன்ற ஆபத்துகள் இருந்தபோதிலும், வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

# ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனநாயகத்துக்கான இலங்கையர்கள் என்ற குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலமாதபோராட்டங்களின் பின்னர் மக்களுக்குக் கிடைத்த மக்கள் பெற்றுக்கொண்ட வெற்றி அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது என அமெரிக்காவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணமானவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




## நுட்பியல் அவத்தை

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் – தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# முப்பரிமாண(3டி) பிறின்டர்கள்

புதிய தொழில்நுட்பங்களால், புதிய நுட்பியல் அவத்தையால் மாற்றத்துக்குள்ளாகிவருகிறது. கொவிட் – 19 தொற்று உலகத்தை உலுக்கிப்போட்டபின் முப்பரிமாண பதிப்பு இயந்திரங்கள் எதிர்காலத்தை மாற்றியமைக்கப்போகின்றன. இன்று இது விரைவாக வளரும் தொழில் நுட்பமாகும். முப்பரிமாண அச்சிடப்பட்ட பொருள்கள் நம் வாழ்க்கையை எளிதாகவும், வசதியாகவும், பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் மாற்றும்வழிகளை இப்போது பார்க்கத்தொடங்கியுள்ளோம். 3டி பிரிண்டிங் விரைவாக உருவாகி வருவதால், நாளாந்த வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்படப்போகிறது எனலாம். புதிய படைப்புக்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மக்கள் புதிய வடிவமைப்புகளைக் தாமே வடிவமைத்துக் கொண்டு வர முடியும் என்பதால், மதிய உணவு, தனித்துவமான சட்டை, அன்றாட பொருள்களை அச்சிடக்கூடிய உலகில் நாம் வாழ்வதற்கு நீண்ட காலம் இருக்காது. தேவையான அனைத்தும் வீட்டிலேயே பெறக்கூடியதான காலத்தை நோக்கி முப்பரிமாண பதிப்பு இயந்திரம் எம்மை நகர்ந்தும் என்று நம்பலாம்.



இன்று இந்தத் தொழில்நுட்பம் மருத்துவ, சுகாதாரத் துறையையும் உலுக்கி வருகிறது. 2020 ஆம் ஆண்டில், COVID - 19 தொற்றுநோய் மருத்துவமனைகளை திணறடித்த போது, வைத்தியர்களுக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் தேவை அதிகரித்தது. இந்த நிலையில் பல சுகாதார சேவை நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு மிகவும் தேவையான பாதுகாப்பு உபகரணங்களையும், அவர்களின் வென்டிலேட்டர்களை சரிசெய்வதற்கான பாகங்களையும் வழங்குவதற்காக 3னு பிரிண்டிங் தொழில்நுட்பத்தை நாடியிருந்தார்கள். 3டி பிரிண்டிங், எதிர்காலத்தில் மருத்துவத் துறையின் புரட்சியாகவிருக்கும். 3டி பிரிண்டிங் மிக விரைவாக பிரபலமடைந்துள்ளது, ஏனெனில் இது முன்பை விட அதிகமான மக்களுக்கு உற்பத்தியை மேற்கொள்ளக்கூடியதாக வடிவமைக்கப்படுகிறது. பாரம்பரிய உற்பத்தியுடன் ஒப்பிடும்போது அச்சுப் பொறிகளின அளவு சிறியதாக இருப்பது இதற்கு மேலும் வசதியானதாகவுள்ளது.



3டி பிரிண்டிங் என்பது ஒரு டிஜிற்றல் மாதிரியை உறுதியான, திடமான, முப்பரிமாண பொருளாக மாற்றும் ஒரு செயல்முறையாகும், பொதுவாக ஒரு பொருளின் பல தொடர்ச்சியான மெல்லிய அடுக்குகளை அடுக்கி வைப்பது போல ஒரு பொருள்வடிவமைக்கப்படும்.

முதலில், பொருளின் மெய்நிகர் வடிவமைப்பு கணனியில் செய்யப்படுகிறது. இந்த வடிவமைப்பு முப்பரிமாண அச்சுப் பொறி படிக்கக்கூடிய ஒரு வரைபடத்தை தருகிறது. இந்த மெய்நிகர் வடிவமைப்பு CAD மென்பொருளைப் பயன்படுத்தி செய்யப்படுகிறது, CAD என்பது துல்லியமான வரைபடங்கள் மற்றும் தொழில்நுட்ப விளக்கப்படங்களை உருவாக்கக்கூடிய ஒரு வகை மென்பொருளாகும். இதனை 3டி ஸ்கேனருடன் இணைத்து ஒரு மெய்நிகர் வடிவமைப்பையும் உருவாக்க முடியும், இது ஏற்கனவே உள்ள ஒரு பொருளின் நகலை உருவாக்குகிறது, அடிப்படையில் அதன் படங்களை வெவ்வேறு கோணங்களில் எடுக்கிறது.

இவ்வாறு, மெய்நிகர் மாதிரி தயாரிக்கப்பட்டவுடன், அதை அச்சிடுவதற்கு தயாராகி விடும். ஸ்லைசிங் எனப்படும் செயல்முறையைப் பயன்படுத்தி மாதிரியை பல அடுக்குகளாக உடைப்பதன் மூலம் இது செய்யப்படுகிறது. ஸ்லைசிங் மாதிரி என்பது சிறப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மெல்லிய, கிடைமட்ட அடுக்குகளாக ஒரு பொருளை அணுகுவதாகும். இவ்வாறு ஒரு மாதிரி தயாரான பிறகு, 3டி அச்சுப்பொறியில் பதிவேற்ற தயாராகிவிடும். பின்னர் USB கேபிள் அல்லது Wi-Fi இணைப்பைப் பயன்படுத்தி, உருவாக்கப்பட்ட மாதிரியை கணினியில் இருந்து 3டி பிரிண்டருக்கு நகர்த்தலாம். கோப்பு 3டி அச்சுப்பொறியில் பதிவேற்றப் படும்போது, அது மாதிரியின் ஒவ்வொரு அடுக்கையும் படித்து பொருளின் அடுக்குகளை அச்சிடுகிறது. முப்பரிமாண அச்சுப்பொறியின் வகை மற்றும் பயன்படுத்தப்படும் பொருள் ஆகியவற்றைப் பொறுத்து, பொருள் வெளியேற்றத்தில் பல முறைகள் உள்ளன.

பொதுவாக, 3டி பிரிண்டரில் உருகிய பிளாஸ்டிக், உலோகம் அல்லது சிமேந்து போன்ற அரை திரவப் பொருளை பயன்படுத்தி பொருள்களை உருவாக்கலாம்.

சரி, 3டி அச்சுப்பொறிகள் மூலம் என்ன வகையான பொருட்களை உருவாக்க முடியும்?, நீங்கள் கற்பனை செய்யக்கூடிய எதையும் 3டி அச்சிடக்கூடிய வடிவமைப்பாக மாற்றலாம். முப்பரிமாண அச்சுப்பொறி கள் வடிவமைப்பாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் அன்றாட மக்கள் கூட சிக்கலான பொருள்களை உருவாக்க உதவுகின்றன.

பொம்மைகள், தொலைபேசி பெட்டிகள், கருவிகள், ஆடைகள், மேசைகள், விளக்குகள், மட்பாண்டங்கள், கலை பொருள்களை உருவாக்க 3டி பிரிண்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மருத்துவத் துறையும் நோயாளிகளுக்கு உதவ 3டி பிரிண்டிங்கைப் பயன்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடித்து வருகிறது. வைத்தியர்கள் இப்போது 3டி மருத்துவ மாதிரிகளை அச்சிட முடிகிறது, அவை மிகவும் துல்லியமானவை, அறுவைசிகிச்சை நிபுணர்கள் நோயாளியின் 3டி மாதிரியில் இயங்கும் நடைமுறையை உண்மையில் அந்த நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு செய்ய முடியும். கைகால்களை இழந்த நபர்களுக்கு சிறந்த பொருத்தம் கொண்ட செயற்கைக் கருவிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது செயற்கைக்கால், கை போன்றவற்றை எதிர்காலத்தில் 3டி பிறிண்டர் மூலம் உருவாக்க முடியும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்கள் 3D பிரிண்டிங்கைப் பயன்படுத்தி, ப்ரோஸ்தெடிக்ஸ், செவிப்புலன் கருவிகள், செயற்கைப் பற்கள் மற்றும் எலும்பு ஒட்டுதல்கள், அத்துடன் உறுப்புகள், கட்டிகள் மற்றும் பிற உட்புற உடல் அமைப்புகளின் மாதிரிகளை அறுவை சிகிச்சைக்குத் தயாரிக்கலாம். சூடானில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை கைகள் மற்றும் கால்களை 3டி தொழில்நுட்பத்தில் அச்சிடும் திட்டம் நடைபெறுகின்றது.

ஆக எதிர்காலத்தில், 3டி அச்சுப்பொறிகளால் வடிவமைக்கப்பட்ட பொருள்கள் சந்தையில் கிடைக்கும். அதாவது தளபாடங்கள், நகைகள் தயாரிப்பதற்கான மெழுகு வார்ப்புகள், சாவிகள், முக்காலிகள், பரிசு மற்றும் புதுமையான பொருள்கள் மற்றும் பொம்மைகள் ஆகியவை அடங்கும். மற்றும் வாகன மற்றும் விமானப் பாகங்களை உருவாக்க 3டி பிரிண்டர்களைப் பயன்படுத்துகின்றனர். கலைஞர்கள் சிற்பங்களை உருவாக்க முடியும், மேலும் கட்டிடக் கலைஞர்கள் தங்கள் திட்டங்களின் மாதிரிகளை உருவாக்க முடியும். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 3டி அச்சுப் பொறிகளைப் பயன்படுத்தி உடையக்கூடிய கலைப்பொருள்களின் மாதிரிகளை புனரமைத்து வரு கின்றனர், இதில் சமீபத்திய ஆண்டுகளில் ISIS ஆல் அழிக்கப்பட்ட சில தொல்பொருள்கள் அடங்கும். அதே போல, பழங்கால ஆராய்ச்சியாளர்களும் அவர்களது மாணவர்களும் டைனோசர் எலும்புக் கூடுகள் மற்றும் பிற புதைபடிவங்களை நகலெடுக்கலாம்.



# புலம்பெயர் புலிகள்சார் அமைப்புகள் சொல்வது கட்டுக்கதை இலங்கை இராணுவ அதிகாரிகள் தவறிழைக்கவில்லையாம்!

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

‘இலங்கை இராணுவத்தினர் போர் விதிகளை மதித்தே நடந்தார்கள். புலம்பெயர் புலிகள் சார் அமைப்புக்களின் கட்டுக்கதைகளை நம்பி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது’ என நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ள 58 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வலியுறுத்தல் இலங்கை இராணுவத்தின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் செயலாகும்.

இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தும் நடவடிக்கையை ஐ.நா. உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஐ.நா. உறுப்புரிமை நாடுகளிடம் இலங்கை இராணுவ அதிகாரிகளைக் கைது செய்யுமாறு அல்லது பயணத்தடை விதிக்குமாறு கோரிக்கை முன்வைக்க மனித



உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணையாளரின் இந்த அறிவிப்புக்கு எதிராக அரசு கடும் கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டும். – எனக் கூறியுள்ளார்.

# ஒரு நாடு – ஒரு சட்டம் தொடர்பான அறிக்கையை குப்பைக்கூடைக்குள் கடாச ஜனாதிபதி தயாரா?

## ரவூப் ஹக்கீம் கேள்வி



கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஒரு நாடு – ஒரு சட்டம் சம்பந்தமான ஜனாதிபதி செயலணிக்குழுவின் அறிக்கையை குப்பை கூடையில் கடாசி வீச ஜனாதிபதி தயாராக இருக்கின்றாரா என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக மக்களுக்குள் முதலில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து ஜனாதிபதி மிக சிறந்த அக்கிராசன உரையை நிகழ்த்தினார் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

அவரது உரையில் உள்ளடங்கியுள்ள சாதகமான விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற நேர்மையான எண்ணம் அவருக்கு இருக்குமாயின் குறைந்தது அவருக்கு எதிராக இருக்கும் சில குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட வேண்டுமாயின் அந்த குற்றச்சாட்டுக்களை அவர் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் மீது குற்றச்சாட்டை சுமத்தியவர்களுடனேயே அவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்றார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் இருப்பது யார் என்பதை கண்டறிய நேர்மையான எண்ணத்தில் செயற்பட்ட ஷானி அபேசேகர போன்ற அதிகாரிகள் பொய் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இப்படியான அதிகாரிகளை மீண்டும் இந்த விசாரணைகளில் ஈடுபடுத்தி உண்மையைக் கண்டறியவேண்டும்எனநாங்கள்கேட்டுக்கொள்கிறோம்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை நடத்தி, இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். அவர்களின் நோக்கம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும்.

இவற்றை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரா என இந்தச் சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்ப விரும்புகிறேன்.

அப்படியில்லை என்றால் குறைந்தது ஒரு நாடு, ஒரு சட்டம் எனக்கூறி நாட்டின் இனங்கள், மதங்களுக்கு இடையில் பகையை ஏற்படுத்திய பிக்கு தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்குழுவின் அறிக்கை குப்பை கூடையில் எறிய ஜனாதிபதி தயாராக இருக்கின்றாரா?.

இதற்கு ஜனாதிபதியாக பதிலளிக்க முடிந்தால், நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியின் வேலைத்திட்டம் தொடர்பில் நம்பிக்கை உருவாகும் எனவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

# ரொப் – 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருது இலங்கையர் ஒருவருக்கும் கிடைத்தது இடம்!




2022 ஆம் ஆண்டுக்கான ‘ரொப்’ 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பட்டியலில் இலங்கையர் ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

ரொப் 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருது என்பது, கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்து கனடாவுக்கு தங்கள் சேவையை ஆற்றியவர்களைக் கௌரவிக்கும் வகையில் கனேடிய குடியேறியவர் என்னும் பத்திரிகை அளிக்கும் கௌரவமாகும்.

ரொப் 25 கனேடிய புலம்பெயர்ந்தோர் விருது பெறுவோர் பட்டியலில் ரொரன்றோ பகுதியைச் சேர்ந்த எட்டு பேருக்கு இடம் கிடைத்துள்ளது.

அவர்கள், பிலிப்பைன்ஸிலிருந்து வந்த பேட்ரிக் அல்சிடோ, இந்தியாவிலிருந்து வந்த டயானா அல்லி டிசோசா, பஹாமாஸ் தீவுகளிலிருந்து வந்த ராகுல் ஃபாக்ஸ், இலங்கையிலிருந்து வந்த சிவகுமார் குலசிங்கம், நேபாளத்திலிருந்து வந்த பூட்டிலா கார் போச்சே, அல்ஜீரியாவிலிருந்து வந்த முகமது லச்செமி, தென் கொரியப் பின்னணி கொண்ட பால் சன் – ஹியுங் லீ, பிரேஸில் நாட்டிலிருந்து வந்த அர்னான் மெலோ ஆகியோர் ஆவர்.

இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ள சிவகுமார் குலசிங்கம் இலங்கையிலுள்ள தேசிய மறுவாழ்வு வைத்திய சாலை என்னும் வைத்தியசாலையில் முன்னணி மருத்துவராக இருந்தவர் ஆவார்.

அப்படி ஒரு முன்னணி மருத்துவராக இருந்த அவர், 2008 ஆம் ஆண்டு கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பிறகு, மருத்துவத் தொழில் செய்வதற்கான உரிமம் பெறுவதற்கு அவர் மிகவும் கஷ்டப்படவேண்டியிருந்தது.

ஆனால், அரும்பாடுபட்டு, தடைகளைத் தாண்டி, இன்று பல்கலைக்கழ சுகாதார நெற்வேக் என்னும் மருத்துவமனைகள் அமைப்பில் மருத்துவராகவும், ரொரன்றோ பல்கலைக்கழகத்தில் துணைப்பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

# ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு நிபந்தனைகளற்ற ஆதரவை வழங்குவோம்

## ரோஹித அபேகுணவர்தன திட்டவட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம். ஒரு காலத்தில் அரசியல் ரீதியில் குறிப்பிட்ட கருத்துக்கள் தொடர்பாகத் தற்போது அவதானம் செலுத்தக் கூடாது என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுவர்தன தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குமிடையில் சனிக்கிழமை பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற பேச்சில் சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தமது கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்காமல் நாடு தொடர்பாக அவதானம் செலுத்தி சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைய வேண்டும் என அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

கேள்வி:– தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகிய ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்கும் அளவிற்கு பொதுஜன பெரமுனவிற்கு மூளை கோளாறு இல்லை என ஆரம்பத்தில் குறிப்பிட்டீர்கள், அந்த நிலைப்பாட்டில் இன்றும் இருக்கின்றீர்களா.....?

பதில்:– அரசியலில் ஒவ்வொரு காலத்துக்கு ஒவ்வொரு விடயம் குறிப்பிடப்படும், அன்று குறிப்பிட்ட விடயம் தொடர்பில் இன்று அவதானம் செலுத்தக் கூடாது. பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சி உட்பட சகல தரப்பினருக்கும்



அழைப்பு விடுக்கப்பட்டது.

சவால்களை பொறுப்பேற்க எவரும் தைரியமாக முன்வராத நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று சவால்களை வெற்றிக்கொள்ள சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுத்து, தற்போது அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம். – என்றார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-86

**திம்பு சொல்லித் தந்த பாடங்கள் என்ன?**

தமிழ்த் தரப்புகளுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடங்களை அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை. அவற்றில் அக்கறை கொள்ளவில்லை. நாய் வாலைத்தான் எப்படியோ நிமிர்த்துவோம் என்ற மனத் தைரியத்தையேதான் – அந்த அறியாமையைகளில் எழுந்த பிடிச்சுறாவித்தனங்களையே தான் – அவர்கள் வெளிப்படுத்தினர்.

மூத்த அனுபவசாலியான பார்த்தசாரதி எல்லாத் தமிழர் தரப்புக்களும் ஒற்றுமையாக, ஒன்றிணைந்து, கோரிக்கைகளை ஜே.ஆருக்குத் தர வேண்டும், புதுடில்லியின் அணுகுமுறை மாறி உள்ளது, அவற்றை அனுசரித்து நடவுங்கள் என்று அறிவுறுத்தி இருந்தார்.

அப்பொழுது கூட அவர், இந்திரா காந்தியோ தானோ தங்கள் அணுகு முறைகளில் தனிநாடு அமைப்பதற்கான எண்ணங்கள் இருந்தன, ஆனால் ராஜீவ் அரசு அந்தக் கொள்கைகளை மாற்றும்



பார்த்தசாரதி

என்ற ஆதங்கத்தை தெரிவிக்கவில்லை. அனுபவக் குறைவில் சில முன்னெடுப்புகள் ஏற்படலாம், அவற்றை ஒட்டித் தமிழ்ப் பரப்புகள் அவதானமாகவும் ஒற்றுமையாகவும் காரியங்களை ஆற்ற வேண்டும் என்ற புத்தியைத் தந்தார்.

புளொட்டைத் தவிர்ந்த ஏனைய விடுதலை குழுக்கள் ஓர் அணியில் ENLF ஆகச் சேர்ந்து அந்த குழுமத்திற்கு மதியுரைஞர் பாலசிங்கத்தைப் பொறுப்பாக ஏற்று, திம்புப் பேச்சு வார்த்தைகளுக்கு முகம் கொடுக்கப் புறப்பட்டனர்.

அதில் அவர்கள் வைத்த கோரிக்கை தமிழர் பிரதிநிதிகளாக இருப்பதற்கான தகுதியை தமிழர் விடுதலைக் கூட்டணி இழந்துவிட்டது, ஆகவே அவர்களின் தலைவர்களாக ENLF விடுதலைக் குழுக்களே ஏற்கப்பட்டு, அவர்களுடனேயே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்பதுதான். அது கூட்டணியின் தலைவர்களுக்கும் தெரியப்படுத்



பாலசிங்கம்

தப்பட்டது. தலைமைக்கான பிளவுகள் றோவின் சந்திரசேகரன் போன்றவர்களுக்கும் அதிருப்தியை தந்தன.

இவற்றைப் பாவித்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பிரதிநிதியாக சென்ற அவரது சகோதரர் ஜனாதிபதி சட்டத்தரணி



பார்த்தசாரதியும் ஜே.ஆரும்

ஹெக்டர் ஜெயவர்த்தனா தாங்கள் பயங்கரவாதிகள், தீவிரவாதிகளுடன் பேசுவதற்கு தயார் இல்லை என்றார். அவற்றைச் சமன்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளில் காட்டப்பட்ட விடாப்பிடித் தன்மை இந்தியப் பிரதிநிதிகளுக்கு விடுதலைப் போராளிகள் மீது கசப்பை வளர்த்தது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையின் தொடக்கத்தில் பிள்ளையார் பூஜையாக அவர்களின் தலைமைப் போராட்ட வேட்கைகளுக்கான அபிகேங்கள்தான் கேட்கப்பட்டன.

அரசியல் நெளிவு சுழிவுகளின் ஆரம்பங்களை அறிவதற்காகவும், அவற்றிலிருந்து முன்னேறவும் ஒழுங்கு செய்யப்பட்ட பேச்சுவார்த்தைகள் இரண்டு பகுதியினரும் தக்கமது நிலைகளில் இருந்து சிறிதும் விட்டுக் கொடுக்க விரும்பாதமையால், 'கோர்ட்டு, கச்சேரியாக' ஒருவரை ஒருவர் தூற்றியமையுடன் முடிந்தது.



ரொமேஷ் பண்டாரி

இடையில் இரண்டாம் கட்டப் பேச்சுக்குத் தமிழர் தரப்புகள் ஒன்றாகத் தமிழர் விடுதலைக்கூட்டணியையும் இணைத்து பின்பு ஒரே தீர்மானத்தை வைத்தார்கள். ஆயினும் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையை தவிர்ந்த தமிழ் மக்களின் மற்ற கோரிக்கைகள் யாவும் இலங்கை அரச பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டன.

திருகோணமலை, வவுனியாவில் நடந்த இராணுவத்தின் தாக்குதல்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுகின்றன, ஸ்ரீலங்கா அரசுக்குத் தீர்வு காண்பதில் உண்மைத் தன்மை இல்லை என்று மதியுரைஞர் பாலசிங்கம் விடுதலைக் குழுக்களுக்கு அறிவித்து, அவர்களைப் பேச்சு வார்த்தைகளில் இருந்து வெளியேறி விடக் கோரினார். அந்த வெளியேற்றத்துடன் பேச்சு வார்த்தை முடிந்தது.

அது இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியின் கோபங்களை அதிகரிக்கச் செய்தது. தங்களுக்கு எதிராக இந்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் எனக் கணித்த ENLF தலைவர்கள் தலைமறைவானார்கள்.

படிக்க வேண்டியவற்றை விட்டு விட்டு கணக்குகளைத் தாங்கள் விரும்பியபடியேதான் செய்வோம் என்ற மாணாக்கர்களுக்கு கிடைத்த பெறுபேறுகள்தான் இங்கும் கடைசியாகக் கிடைத்தன.

**திம்புவின் பின்**

புலனாய்வுத்துறையின் நாராயணன், உளவுத்துறையின் சந்திரசேகரன் போன்ற யாபேரும் விடுதலைக் குழுக்களின் ஆதங்கங்களை அறிந்து அனுதாபமாக இருந்தாலும், பேச்சுக்களில் அவர்கள் நடந்துகொண்ட முறைமையில் திருப்திப்படவில்லை.

மேலும் அரசியல் முன்னெடுக்கப்பட வேண்டி இருந்தது. அந்த தீர்மானத்தை அதிரடியாக வெளிவிவகாரச் செயலாளர் பண்டாரி எடுத்து உடனடியாக அறிவித்தார். பாலசிங்கம், சந்திரகாசன், ரெலோவின் பிரதிநிதியாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்தினார். அது சரியா, முறையானதா என்று அபிப்ராயங்கள் கூட றோவிடம் இருந்தோ, புலனாய்வுத் துறையிடமிருந்தோ கோரப்படவில்லை. நாடு கடத்தல் உத்தரவு கையளிக்கப்படும் முன்னரே சத்தியேந்திரா வெளியேறி விட்டார். பாலசிங்கமும் சந்திரகாசனும் நாடு கடத்தப்பட்டனர். எவ்வளவுதான் அனுசரணைகளும் தொடர்புகளும் ஆதரவுகளும் இருந்தாலும், அது யானையின் பாகங்களைப் பார்த்து அவற்றை யானையாக எண்ணிய அந்தகர்களின்



சத்தியேந்திரா

நிலையில்தான் பாலசிங்கமும் சந்திரகாசனும் சத்தியேந்திராவும் நாடு கடத்தலை எதிர்கொண்டனர்.

அந்த யானை போல ஆலமரத்தின் வேர்கள், கிளைகளை முழுமையாக அறிந்து கொள்ளாது, அனுபவக் குறைவுகளில் தீர்மானங்களும், தாங்கள் போடும் கணக்குகளே சரியானவை என நிரூபிக்க விழைந்தவைகளும்தான் ரணிலின் ஜனாதிபதித் தேர்தலிலும் நடந்தவை. திம்பு அனுபவத்தில் இருந்தும் கூட படிக்க விரும்பாதவை இவைதான்.

கோர்வைகளுக்காக பெங்களூரில் நடந்த இரண்டாவது சார்க் மாநாட்டின் போது எம்.ஜி.ஆரின் அனுசரணையில் பாலசிங்கத்துடன் பிரபாகரன் ஸ்ரீலங்கா பிரதிநிதிகளுடன் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டதும், அங்கு போய் எம்.ஜி.ஆரைச் சந்தித்து விட்டு, ஸ்ரீலங்கா பிரதிநிதிகளுடனான சந்திப்பைத் தவிர்த்துவிட்டு வெளியேறியமையும், அவை எம். ஜி. ஆருக்கு தந்த மனத் தாங்கல்களும் கூறப்பட வேண்டியவை. அவை பரவலாகப் பதியப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பிரபாகரன் திம்புவில் இருந்த விடுதலைக் குழுக்களின் ஒற்றுமையைக் கூடத் தொடர்ந்து முன்னெடுக்காமல் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற பங்காளி குழுக்களை அழித்து, அவற்றைத் தடை செய்து, விடுதலைப் பாதையில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தினார். இவற்றினால் ஜடாயு போல் ஒரு தலைமையை உருவாக்கி, ஆணித்தரமாக நடைமுறைகளைக் கையாண்



எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனா

டாலும், அது முள்ளிவாய்க்காலில் வெட்டிச் சரிக்கப்பட்ட பொழுது மக்கள் வானத்தை நோக்கி ஓலமிட்டு, இனப்படுகொலையை நிறுத்தக் கோரி கதறினாலும், இந்தியா அதையொட்டி நடந்துவிட்டவையால் அசிரத்தையாகவே இருந்தது.

(வளரும்)